

ஆத்தூர் சட்டமன்ற தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்ற ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உடனடியாக தீர்வு வழங்கினார். பழனி பாலதண்டாயுதபானி திருக்கோவில் அறங்காவலராக தேர்வு செய்யப்பட்ட பாலசுப்பிரமணி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழுஉறுப்பினர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் ஹரிகரன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## நாளை 21ஆம் தேதி முதல்வர் வருகை!

# சிவகங்கை மாவட்டத்திற்கு வலுச்சேர்த்திடும் வகையில் அமையும்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, ஜன. 20-*

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடி யில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர்அ. கணேசன் தலைமையில் மாநில இலக்கிய அணி புரவலர் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. கடந்த மூன்றரை ஆண்டுகளாக நல்லாட்சி நடத்தி வரும் மக்கள் முதல்வர் தளபதி அவர்கள் வருகிற 21 ,22 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். காரைக்கு டியில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குடும்பத்தினரால் கட்டப்பட்டுள்ள லட்சுமி வளர் தமிழ் நூலகத்தை திறந்து வைத்து பல்கலைக்கழகத் திடம் ஒப்படைக்கிறார். அதை தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அய்யன் திரு வள்ளுவர் சிலையை திறந்து வைக்கிறார்.

அதை தொடர்ந்து பல்கலைக்கழக அரங்கத்தில் விழா பேருரை ஆற்றுகிறார்.

மாலை 5.00 மணி அளவில் காரைக்குடி பி.எல்.பி .பேலசில் நடைபெறும் கழக நிர்வாகிகளுடன் கட்சிப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளார். அன்று இரவு காரைக்குடியில் தங்குகிறார் மறுநாள் 22ம்தேதி புதன்கிழமை காலை 9 மணி அளவில் காரைக்குடி யில் இருந்து கார் மூலம் கிளம்பி குன்றக்குடி, பிள்ளையார்பட்டி , திருப்பத்தூர் பைபாஸ் சாலை ,அரளிக்கோட்டை ,ஒக்கூர் வழியாக சிவகங்கை அரசு மன்னர் துரைசிங்கம் நினைவு கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள விழா மேடைக்கு செல்கிறார். குன்றக்குடி பிள்ளையார்பட்டி, திருப்பத்தூர் பைபாஸ் சாலை , ஒக்கூர் , சிவகங்கை நகர்ஆகிய ஊர்களில் அந்தந்த ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,மாவட்ட சார்பு அணி நிர்



வாகிகள் முதல்வரை வரவேற்க உள்ளார்கள்.

இதற்காக ஏற்பாடுகளை அந்தந்த நிர்வாகிகள் செய்து வருகிறார்கள் திரளான அளவில் பொதுமக்களும் கலந்து கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சி அமைய உள்ளது .சிவகங்கை மன்னர் அரசு துரைச்சிங்கம் கல்லூரி திடலில் 50 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு வகையிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் முடிவுற்ற பணிகளை துவக்கி வைக்கிறார் .புதிதாக துவங்கப்பட உள்ள பணிகளுக்கு அடிக்கல் நாட்டில் விழா பேருரை ஆற்றுகிறார்.விழா முடிவடைந்து பகல் 12 மணி அளவில் கார் மூலம் கிளம்பி மதுரை சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார்.

தமிழக முதல்வர் அவர்களின் வருகை நமது மாவட்டத்திற்கு மேலும் வலுவூட்டும் வகையில் அமைய உள்ளது .முதல்வர் வரும் பொழுதெல்லாம் சிவகங்கை மாவட்ட மக்கள் கழக நிர்வாகிகள் சிறப்பான முறையில் வரவேற்ப தால் அவர் மகிழ்ச்சியுடன் செல்வார். இம்முறை மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கிட மாவட்டத்திற்கு வருகை தரும் முதல்வரை நாம் அனைவரும் சிறப்பான முறையில் வரவேற்க வேண்டும் .கழகத்தினர் பிளக்ஸ் ,பேனர்கள் , வைக்க கூடாதுஎன்று கேட்டுக்கொள்கிறேன். கழக கொடியினை இருபுறமும் அமைத்து சிறப்பான வரவேற்பினை தர வேண்டும். நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திட அனைவரும் ஒத்துழைப்புதருமாறு கேட்டுக்கொள்கிறேன். முதல்வரின் வருகை யால் சிவகங்கை மாவட்டத்தில் கழகம் மேலும் வளர்ச்சி உள்ளதாக அமையும் .

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கள் டாக்டர் எஸ். சுந்தர்ராஜ், க.சண்முகம் ,பி.ஆர். என் போஸ் ஆகியோர் பேசினார்கள் . இந்த செயற்குழு கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் கள் அ.முகம்மது, சே.முத்து துரை, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன் ,எஸ். மாரியப்பன் கென்னடி, மாநில மாணவரணி இணைச் செயலாளர் பூரண சங்கீதா, நகர் கழக செயலாளர்கள் பெரி. பாலா. சிஎம்., துரை. ஆனந்த்,க.பொன்னுச் சாமி, பொதுக்குழு உறுப்பினர் கள் பள்ளத்தூர் கே. எஸ். ரவி ,எம்.சோமசுந்தரம், பி. டி. ஆர். முத்து, அம்பல முத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் சுப . சின்னத்துரை, கே .ஆர். ஆனந்த், வே.பூபால சிங்கம், நாகனிரவி, லெ.மு.ரவிச்சந்திரன் விராமதி மாணிக்கம் எஸ் .சண்முக வடிவேல், குன்னக்குடி சுப்பிர மணியன், நா. நெடுஞ்செழியன் , திருமலை முத்துராம லிங்கம், எம் .ஜெயராமன், துரை. ராஜாமணி, எம் .அண்ணாதுரை, ஆர். எம். கென்னடி, வே.ஆரோக்கியசாமி. யோக கிருஷ்ணகுமார், எம்.ஏ. கடம்ப சாமி, ஆறு .செல்வ ராஜன், பி .செல்வ ராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், நாகூர் கனி ,அசோக், பிரம்மையா, ஜெயராமன்,ஆர். கார்த்திகேயன், மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணிஅமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் மாவட்ட மகளிர் அணி தலைவர் திருமதி மணி மேகலை முத்துசாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ் .ஏ.வல்லபாய், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்கு மார் பேரூராட்சி மன்ற தலைவர்கள் திருமதி ராதிகா,பி.ஏ. நஜுமுதீன், கே .பி .எஸ் பழனியப்பன்,

மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம்.முருகானந்தம், மாவட்ட தொழிலாளரணிஅமைப்பாளர் தனசேகரன், தகவல் தொழில். நுட்ப அணி மெ.காளிமுத்து, கண்ணன், வர்த்தக அணி ருக்மா சரவணன் , ஒன்றிய, நகர,பேரூர் நிர்வாகிகள் சேவியர், அண்ணாமலை அன்புசெல்வன், அயூப்கான், சு. ஜெயகாந்தன்,, மற்றும் ஊராட்சி கழக செயலாளர் கள் கலந்துகொண்டார் கள். முடிவில் காரைக்குடி மாநகரச் செயலாளர் என். குணசேகரன் நன்றி கூறினார் .கூட்டத்தில் மாவட்ட கலைஞர் டிவி செய்தியாளர் ஆர். ஜகன்னாத் தந்தை எம் . ராஜாராம் உட்பட பல்வேறு கழகத்தினர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிடம் மவுனம் கடைபிடிக்கப்பட்டது.

## எம்.ஆர்.செந்தில்குமார் தலைமை!

# நாகூரில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா - பொதுக்கூட்டம்!

### என்.கௌதமன், சைதை சாதிக், அகிலா சிறப்புரை!

### ஆர்.அருள்செல்வம் பங்கேற்பு!

*நாகை ஜன.20-*

நாகை மாவட்டம் நாகூர் நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாபொதுக்கூட்டம் நாகூர் பெருமாள் கீழ வீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகூர் நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர்மன்ற துணைத்தலைவர் எம். ஆர். செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட பிரதிநிதி என்.கரிகாலன் வரவேற்றார். நகரக் கழக துணைச் செயலாளர்கள் கே.சித்திரா, ஜி.பன்னீர் செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் சி.நாகரெத்தினம், ஏ.முகம்மதுஹாஜி நகர பொருளாளர் அமான்(எ) ச்.முகம்மதுஷேக்தாவூது, நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஜெ,ஆஷீக் அமீது, ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர் சைதைசாதிக், இளம் பேச்சாளர் அகிலா ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், நாகை தொகுதி பார்வையாளர் ஆர்.அருள்செல்வம், வட்ட கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் ஜோசப் ஜுன்ஆல்பர்ட், எம்.முகம்மதுபாருக், எச்.ஜெகபர்சாதிக், ஜெ.அப்துல்மாலிக், டி.வி.குமார், ஏ.பி.ஏ.அஜிஸ்அப்சர் முகம்மதுகௌஸ், எச்.அப்துல்ஹீம், பசிரியா, எம்.பாக்யவதி, எம்.முகம்து அலி, மஞ்சுளா, எஸ்.கணேசன், என்.ஜோதி, எஸ்.குணசேகரன், எம்.அறிவழகி, எம்.சீத்தராமன், ஏ.நிர்மலா, எஸ்.சுமையாஆசிகா, எஸ். செல்வகுமாரி, சஹானத்துல், மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், நகர, வார்டு கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் வார்டு செயலாளர் ஜி.ஆர். குணசீலன் நன்றி கூறினார்.



சேலம் மத்திய மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் சேலம் நாடாளுமன்ற தொகுதி செயலாளர். பால சுப்பிரமணியன் தலைமையில் 200 பேர். அக்கட்சியை விட்டு விலகி மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் மாவட்டப் பொருளாளர் மு.கார்த்திகேயன். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், மாநகர செயலாளர். பா.ரகுபதி ஆகியோர் இருந்தனர்.




விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சட்டமன்ற தொகுதி, வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றியத்தில் விருதுநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் துணை முதலவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக மாவட்ட அளவிலான மாபெரும் வாலிபால் போட்டியை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் போட்டியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.கே.எஸ்.வி.டி.சுப்பாராஜ், ஒன்றிய செயலாளர்கள் ஏ.கடற்கரை ராஜ், எம்.கிருஷ்ணகுமார், வி.ஜெயப்பாண்டியன், நகர செயலாளர் டி.எஸ்.குருசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் இளங்கோ, வினோத் குமார், தக்ஷிணா மூர்த்தி, நல்ல செல்வமணி, வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ராஜேஷ் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், கவுன்சிலர்கள்,விளையாட்டு மேம்பாட்டு அணி, இளைஞர் அணி, மாணவர் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நகர ஒன்றிய நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

# அமெரிக்க அதிபராக டிரம்ப் இன்று பதவியேற்பு!

*வாஷிங்கடன், ஜன.20-*

நடந்து முடிந்த அமெரிக்கா அதிபர் தேர்தலில், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கமலா ஹாரிஸை வீழ்த்தி, குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்று அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவின் 47வது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டிரம்ப், இன்று (ஜனவரி 20ஆம் தேதி) அமெரிக்கா அதிபராக பதவியேற்கிறார். 2வது முறையாக அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட



டொனால்ட் டிரம்ப், தான் பதவியேற்ற பின்னர் என்னென்ன மாற்றங்கள் மற்றும் திட்டங்கள் செய்யப்படும் என்று தேர்தலில் வெற்றி பெற்றதில் இருந்து ஒவ்வொரு நாளும் டொனால்ட் டிரம்ப் அறிவித்து வருகிறார்.

டொனால்ட் டிரம்ப் போடு, ஜே.டி.வானஸ் என்பவர் துணை அதிபராக பதவியேற்கவுள்ளார். உலகின் தலைசிறந்த நாடாக பார்க்கப்படும் அமெரிக்காவில் இரண்டாவது முறையாக அதிபராகடொனால்ட் டிரம்ப் பதவியேற்கும் விழாவில் உலகெங்கிலும் உள்ள பல தலைவர்கள் பங்கேற்க இருக்கின்றனர்.

அந்த வகையில், இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அதிபர் பதவியேற்கும் விழாவில் பங்கேற்க இருக்கிறார். இந்த நிகழ்ச்சியின் போது டிரம்ப் நிர்வாகத்தில் உள்ள பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு வெளிநாட்டு தலைவர்களுடன் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக தகவல் வெளியாகியிருந்தது. டொனால்ட் டிரம்ப் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி - சூரியா வெற்றி கொண்டான் - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

*நெல்லை.ஜன.20-*

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் இளைஞர்களின் எழுச்சி நாள் முன்னிட்டு பாளை பகுதி கழகம் சார்பில் நாளை 21ஆம் தேதி மாலை 6 மணிக்கு நெல்லை பாளையங் கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் திடலில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு பாளையங்கோட்டை பகுதி கழகத்தின் சார்பில் நாளை 210125 ம் தேதி மாலை 6 மணிக்கு பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் மைதானத்தில் வைத்து மாபெரும் பொதுகூட்டம் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் அருள் மாணிக்கம் தலைமையில் பிரான்சிஸ், அலிஃப் மீரான், மகாகிப்ட்சன்,வில்சன் மணித்துரை,முகமது கமாலுதீன், பலராமன், வல்லநாடு முத்து, சௌந்திரம்,பார்வின்,ஆனி ராக்லண்ட்,நர்மதா திலக் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மைக்கேல் ராஜேஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி,கழக சட்டத் துறை இணை செயலாளர் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நெல்லை மாநகர கழக செயலாளர் சு.சுப்பிர மணியன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஏசி ஜெயக்குமார்,நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்வில் பகுதி செயலாளர்கள் தச்சை பூ.சுப்பிரமணியன், மேலப்பாளையம் சாகுல் ஹமீது,நெல்லை பேட்டை நமச்சிவாயம் கோபி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சி பாண்டியன், ஏ.எல்.எஸ் லெட்சுமணன்,மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு, பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ்,மாநில நிர்வாகிகள் சுப.சீதாராமன், சொ.பெருமாள்,மாலை ராஜா, விஜிலா சத்யானந்த்,ராஜா முகமது, ராஜ் வர்மன், மாவட்ட நிர்வாகிகள் வி. கே.முருகன்,எஸ்.வி.சுரேஷ், ஆ.தர்மன்,கிரிஜா குமார், வண்ணை சேகர், மாநகர நிர்வாகிகள் அப்துல் கையூம், மூளிகுளம் பிரபு, சுதா மூர்த்தி,பூக்கடை அண்ணாதுரை, வட்ட செயலாளர்கள் பத்மராஜ், ரகுமதுல்லா, எம்.எஸ்.ராஜ், கோட்டூர் செய்யது,மனோகரன்,தளவாய், அருள் இளங்கோ,பேபி கோபால், ஜெயின் உசைன், ஆவின் கல்யாணி,பால மகேஷ், பெர்க்மான் பாஸ்கர் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில்32வது வட்ட கழக செயலாளர் கதிரேசன் நன்றியுரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பாளையங்கோட்டை பகுதி கழக செயலாளர் அன்டன் செல்லத்துரை செய்துள்ளார்.





புதுச்சேரி மாநில பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம் புதுச்சேரி மாநில கழக பொறுப்பாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் பொறியாளர் அணி மாநிலத் துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளர் முனைவர் சி.பிரதீப் முன்னிலையில் நடைபெற்றது.பொறியாளர் அணி நிர்வாகிகள் அமைப்பாளர் ஆ. அருண்குமார் வரவேற்பு மற்றும் தலைவர் எஸ்.பி.பூபாலன் நன்றி உரை ஆற்றினார்கள் .இந்த கூட்டத்தில் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள 23 சட்டமன்றத் தொகுதி வாரியாக பொறியாளர் அணி நிர்வாகிகள் தேர்வுக்கு QR code மூலம் பதிவு செய்து நேர்காணல் நடத்தி நிர்வாகிகள் நியமனம் செய்யவும் அதிக அளவில் உறுப்பினர் சேர்க்கை செய்யவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இந்தக் கூட்டத்தில் ரா.மணிகண்டன்,க.உமாபதி, ச. முகுந்தன், சே.சொர்ண ராஜ்,ம.அர்ஜுன், ஏ.எழிலரசன்,இரா.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.